பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 11 | திங்கட்கிழமை | 24.06.2024 | அதிர்வு 328

## நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்களில் இருவர் இலங்கையர்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய வேளை கைது செய்யப்பட்ட 06




# தமிழர்களிடத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த எந்தச் சவால்களையும் சந்திக்க நாம் தயார்

## ரெலோவின் தலைவர் செல்வம் பகிரங்கம்

(கே.வசந்தன்)

"தமிழீழ விடுதலை இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க எப்படி ஒத்துழைத்ததோ அதேபோல் நாங்கள் விட்டுக் கொடுப்புக்களுடன் தமிழர்களிடத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த எந்தச் சவால்களையும் சந்திக்கத் தயாராகவுள்ளோம். மக்கள் தலைவனற்றவர்களாக இருக்கின்றார்கள். கட்சிகள் ஒற்றுமையாக வரவேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்கள்."

- இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். 06

# தனிவழியில் பயணிக்க தயாராகின்றது மொட்டு?




ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காதிருக்கும் முடிவை நோக்கி மொட்டுக் கட்சி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் 06




பலதுறைகளில் – பல விடயங்களில் – உலக கின்னஸ் சாதனைகள் அவ்வப்போதும் நிலை நாட்டப்படுவது தெரிந்ததுதான்.

இப்போது இலங்கையில் புரியப்பட்டிருக்கும் கின்னஸ் சாதனை பற்றி ஒரு தகவல் வந்திருக்கின்றது. இது கடந்த வருடம் ஜூனில் இடம் பெற்ற சாதனை.

இரத்தச் சுற்றோட்டத்தில் சிறுநீரைப் பிரித்தெடுப்பது சிறுநீரகம். தொடர்ச்சியாக நடைபெறும் அப்பணியின் போது சிறுநீரகத்தில் கற்கள் உருவாகின்றமை பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். பல சமயங்களில் வேறு வழியின்றி இறுதியாக அறுவை சிகிச்சை மூலம் அவை வெட்டி அகற்றப்படுவது வழமை.

அப்படிப்பட்ட ஒரு 06





# கொக்கட்டிச்சோலையில் நேற்று தியாகிகள் தின நினைவேந்தல்!

‘மக்கள் இல்லாத மண்ணை நேசிக்க வில்லை, மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்றோம்’ எனும் தொனிப் பொருளில் சத்துருக்கொண்டான், காத் தான்குடி, கொக்கட்டிச்சோலை, அரந்தலாவ, வெருகல் படுகொலகளின் போது கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் வகையிலும், ஜுன் 19இல் கடந்த 34 ஆவது தியாகிகள் தினத்தை ஒட்டியும் நினைவேந்தலும் பெண்கள் தலைமைதாங்கும் 200 குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கொக் கட்டிச்சோலையில் இடம்பெற்றது.

கொக்கொட்டிச்சோலை பத்மநாபா மக்கள் முன்னணி அமைப்பின் ஏற்பாட் டில் பத்மநாபா மக்கள் முன்னணி தலை வர் தோழர் யோகி என்றழைக்கப்படும் முருகையா யோகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் மற்றும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வில் அதிதிகளாக நன்கொடையாளர்களான கனடாவைச் சேர்ந்த கனகசபை சபே சன், இங்கிலாந்தைச் சேர்ந்த கனகசபை சிவசுந்தரம், மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு சபை தலைவரும் மாவட்ட பல நோக்குக் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவருமான எம். உதயராஜ், மட்டக் களப்பு தபால் அதிபர் த.இந்திரன், சமா தான நீதவானும் மட்டக்களப்பு ப.நோ.கூட்டுறவு சங்க முன்னாள் தலை வரும் எல்லை வீதி சிந்தாமணி பிள்ளை யார் ஆலைய போசகருமான சிவலிங் கம் கனகசபை, மட்டு. அம்பாறை செய லாளர் தோழர் சலீம், சமூக செயற் பாட்டாளர் செங்கதிரோன் கோபால கிருஷ்ணன் உட்படவர்கள் கலந்து கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி சுடர் ஏற்றியமெளயுடன் கொக்கட்டிச் சோலை, காத்தான்குடி, வெருகல், சத்தி ருக்கொண்டான், அரந்தலா வையில் படுகொலை செய்யப்பட்ட வர்களையும்



நினைவு கூர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்

இதனை தொடர்ந்து தெரிவு செய் யப்பட்ட கொக்கட்டிச்சேலை பிரதேசத் தைச் சேர்ந்த 200 பெண்தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு பணம் வழங்கி கௌரவித்தனர்.





# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் தம்பலகாமம் பாடசாலையில் குழாய்கிணறு!

(எஸ்.கீதபொன்கலன்)

யாழ். மத்திய கல்லூரியின் 1991ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களினால், இவ்வுலகை விட்டுப் பிரிந்த நண்பர்களின் நினைவாக, திருகோணமலை தம்பலகாமம் பராசக்தி வித்தியாலயத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, மாணவர்களின் குடிதண்ணீர்ப் பயன்பாட்டுக்காக குழாய் கிணறு அமைத்து, கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டு, உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் மற்றும் யாழ். மத்திய கல்லூரியின் 1991ஆம் ஆண்டு மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.




# அதிபர்,ஆசிரியர்கள் புதன்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டம்!


நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதனன்று சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஊடக சந்திப்பு சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசனின் யாழிலுள்ள இல்லத்தில் இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கம் நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை கோரியும் பெற்றோர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள் மற்றும் மாணவர்களுடைய போசாக்கு பிரச்சினைகள் ஆகிய கோரிக்கைகளை உள்வாங்கி குறித்த சுகவீனப் போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் திலீசன் அறிவித்துள்ளார்.

ஆகையினால் எந்தவித அச்சமும் இல்லாமல் அனைத்து அதிபர், ஆசிரியர்களும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இத்தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமிடத்து அதற்கு எதிரான நடவடிக்கைகளை ஆசிரியர் சங்கம் நிச்சயம் எடுக்கும். – என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட உப தலைவர் ரி. திருஞானசேகரன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட செயலாளர் சொ. சிவசுதன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் துணுக்காய் வலய தலைவர் த. திலீபன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் வலய இடமாற்று சபை உறுப்பினர் சொ. காண்டீப ராஜா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.





# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே நான் நாட்டினது பொறுப்பை ஏற்றேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். நாட்டின் விவசாயிகளின் வாழ்விலும் புதிய மாற்றம் ஏற்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் 55 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு – கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை நேற்றுக் காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு தமிழ் கலாச்சார முறைப்படி வரவேற்பு அளிக்கப்ப்பட்டது.

நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டார். அதனையடுத்து விவசாயிலுக்கு ஜனாதிபதியால் மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, மைலம்பாவலி – செங்கலடி பிரதேசத்தில் அமைந்துள்ள மாதுளை தோட்டத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் பார்வையிட்டார்.

இந்த மாதுளை தோட்டம் 150 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருப்பதோடு, 300 விவசாயிகள் இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கடந்த வருடம் அரை ஏக்கர் மாதுளை விளைச்சலில் 36 லட்சம் ரூபா வரையிலான வருமானத்தை ஈட்டியிருந்தனர்.

நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ஃ

“இது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஓர் அங்கமாகும். நாட்டில் விளைச்சல் செய்யாத காணிகளே அதிகளவில் உள்ளன. இந்த நிலங்கள் அனைத்தும் விளைச்சலுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். அதனூடாக ஏற்றுமதி விவசாயமாக கட்டமைக்க வேண்டும். இந்த நாட்டின் உணவுத் தேவைக்காக மட்டுமன்றி, மற்றைய நாடுகளின் உணவுத் தேவைக்காகவும் விவசாயப் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

தொடர்ச்சி▼

















# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே நான் நாட்டினது பொறுப்பை ஏற்றேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

அதன் மூலம் அதிகளவில் வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட முடியும். வெளிநாடுகளில் இருந்து கடன் பெற வேண்டிய தேவையும் இருக்காது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே இந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன். புதிய பொருளாதாரம் உருவாகும்போது, நாட்டின் விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

இன்று இத்தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டதுடன் விவசாய நிறுவனங்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய பணிகளை முன்னெடுக்க மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன. இந்திய விவசாயிகள் இந்த செயற்பாடுகளை தங்கள் கை தொலைபேசியின் மூலம் முகாமைத்துவம் செய்கின்றனர்.

அரசாங்கத்தின் காணிகளில் விவசாயம் செய்து வந்தவர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்கியிருக்கிறோம். நேற்றைய தினம் (சனியன்று) மட்டக்களப்பு மாவட்டத்திலும் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அதனால் உங்களுக்கு காணி உறுதி கிடைத்துள்ளது. அதனால் நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்.

மேலும், நாடளாவிய ரீதியில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். விவசாய அமைச்சும் மாகாண விவசாய அமைச்சுகளும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும். அடுத்த வருடத்திற்குள் அனைத்து விவசாய சேவை நிலையங்களையும் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை படிப்படியாக அதிகரித்து, கிராமப் பகுதிகளும் வளர்ச்சியை எட்டும்.

அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம். மகாவலி ஏ – பி வலயங்கள் உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயத்தை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதன் மூலம் அப்பகுதி விவசாயம் முழுமையாக வளர்ச்சி அடையும்.” – என்றார்.













# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயத்தில்தான் இலங்கை சாதனை நிகழ்த்தி இருக்கின்றது.

உலகின் மிகப்பெரிய சிறுநீரகக் கல் ஒரு நோயாளியின் சிறுநீரகத்தில் இருந்து









அகற்றப்பட்டது இலங்கையில்தான்...!

2004 ஆம் ஆண்டு இந்தியர் ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்து 13 சென்டிமீட்டர் நீளமான கல் அகற்றப்பட்டது. 2008 இல் பாகிஸ்தானியர் ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்து 600 கிராம் எடை கொண்ட கல் வெட்டி எடுக்கப்பட்டது.

இவை இரண்டையும் முறியடிக்கும் விதத்தில், கடந்த ஆண்டு கொழும்பு நாரஹன்பிட்டிய இராணுவ ஆஸ்பத்திரியில் சிலாபத்தைச் சேர்ந்த – 62 வயதுடைய – முன்னாள் இராணுவப் படை வீரர் ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்து 13.37 சென்டிமீட்டர் நீளமான 800 கிராம் எடை கொண்ட பெரிய கல் ஒன்று அகற்றப்பட்டிருக்கின்றது.

சிறுநீரக சிகிச்சை நிபுணரான டாக்டர் கே.சுதர்சன் இந்த ஒன்றரை மணி நேர சிறுநீரக சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்திருக்கின்றார்.

அகற்றப்பட்ட அந்தக் கல்லின் படத்தையும், அதை சத்திர சிகிச்சை மூலம் அகற்றிய டாக்டரின் படத்தையும், மருத்துவப் பணியாளர்கள் அணியின் படத்தையும் இணைத்துள்ளேன்.

சிறுநீரகத்தில் உருவாகும் கற்கள், சிறுநீர்க் குழாயில் உருவாகும் கற்கள், சிறுநீர் பையில் உருவாகும் கற்கள் என்று இந்த கற்கள் மூன்று வகைப்படும்.

இப்போது இலங்கை சாதனை புரிந்திருப்பது இடதுபுற சிறுநீரகத்தில் இருந்து அகற்றப்பட்ட கல் மூலம்....!

# தனி வழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரை மொட்டுக் கட்சி களமிறக்கும் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வரும் கட்சிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களில் பெரும்பாலானவர்கள் ராஜபக்ஷக்களின்றி தேர்தலை சந்திப்பது சிறந்தது என ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அவ்வாறு ராஜபக்ஷ அணியுடன் பயணித்தால் வெளியில் இருந்தே ஆதரவு வழங்க நேரிடும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். இதனால் மொட்டுக் கட்சி கடுப்பில் உள்ளது.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின்போதுகூட இது தொடர்பில் மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ரணிலுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற நாமல் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் முன்வைத்துள்ள யோசனையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த சிறு கட்சிகளின் ஆதரவையும் ரணில் விக்கிரமசிங்க தனித்தனியே பெற்றுள்ளமையும் ராஜபக்ஷ தரப்பைச் சினம்கொள்ள வைத்துள்ளது.

இவ்வாறான அரசியல் முறுகல்களாலேயே ரணிலுக்கான ஆதரவை ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி வழங்காதிருக்கும் எனத் தெரியவருகின்றது. எனினும், மொட்டுக் கட்சியைச் சமரசப்படுத்தும் முயற்சியில் ரணிலின் பிரதிநிதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மும்முனை போட்டி நிலவும் என்பதால் மொட்டுக் கட்சியின் ஆதரவு அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, மொட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டால் அது எதிரணியின் வெற்றியை முன்கூட்டியே உறுதிப்படுத்திவிடும் என ஆளுங்கட்சியில் உள்ள சில அரசியல் பிரமுகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# தமிழர்களிடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக தலைவர் சிறிசபாரத்தினத்தின் சிலையை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தென்னிலங்கையில் பல சமர்களைச் செய்து தியாகங்கள் புரிந்து விடுதலைக் காகப் பாடுபட்ட ஒரு இயக்கமே தமிழீழ விடுதலை இயக்கம். அதன் தலைவருடைய சிலையை இன்று திறந்து வைத்துள்ளோம்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் எங்களது இனத்தையும், எங்களது நிலத்தையும், எங்களது பூர்வீகத்தையும் காப்பாற்ற முடியாது என்பதைச் சிறி அண்ணாவின் உடைய சிலை வெளிப்படுத்துகின்றது.

தமிழர்களாகிய நாங்கள் ஒற்றுமையாக இல்லையெனில் எமது இனத்தைச் சிங்கள தேசத்தில் இருந்து காப்பாற்றமுடியாது. துப்பாக்கிச்சத்தம் இல்லாத போதும் எமது மக்களின் பூர்வீகத்தை ஒழித்து நிலங்களை அபகரிக்கின்ற திணைக்களங்களை வைத்துக் கொண்டு நிலத்தைப் பறிக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன.

ஒற்றுமை என்பது இப்போதும் இல்லாமல் இருப்பதை எண்ணுகின்றபோது கவலையாக இருக்கின்றது.

எங்களது இனத்தைக் காப்பாற்ற இருக்கின்றோம் என்று கூறுகின்ற தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகள் எல்லாம் வாயளவில்தான் இனத்தின் விடுதலை என்கின்றார்களே தவிர, இனத்தின் விடுதலைக்காக ஒற்றுமையாகச் செயற்படத் தயாரில்லை. மக்கள் விரும்பும் ஒற்றுமையை அவர்கள் செய்யத் தயாரில்லை.

தலைவர் சிறிசபாரத்தினம் ஒற்றுமைக் காகப் பாடுபட்டவர். தமிழீழ விடுதலைப் புலிகள் கூட இந்தியாவில் ஒரு அணியாக இணைந்து செயற்பட்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் ஒற்றுமைக் காகக் கொண்டு வருகின்ற வாய்ப்புக்களை எந்த விட்டுக் கொடுப்புக்களையும் செய்து எங்களது இனத்தையும் நிலத்தையும் காப்பாற்றத் தயாராக இருக்கின்றோம்.

மக்களுக்காகத் துப்பாக்கி ஏந்தி எவ்வாறு பொது எதிரியைச் சந்தித்தோமோ அதேபோல் அந்தப் போராளிகளின் இலட்சியத்தை அடைய வேண்டும். எல்லாக் கட்சிகளையும் ஒன்றிணைத்துச் செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

எம்மைப் பார்த்து சிலர் விமர்சனம் செய்கிறார்கள். ஒட்டுக்குழு என்கின்றார்கள். இப்படி பல தேவையில்லாத கதைகளைப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் பலமாக இருக்கின்றபோது எங்களுக்குள் இருந்த வடுக்களை ஒருபக்கம் வைத்து விட்டு எங்களது இனம் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக விடுதலைப்புலிகளோடு கைகோர்த்துச் செயற்பட்டோம் என்பதைப் பகிரங்கமாக எல்லா மக்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, நாங்கள் ஒட்டுக்குழுக்கள் இல்லை. தேசியத்தை நேசிப்பவர்கள்.

நாங்கள் இராணுவத்துக்கு எதிராக முதன் முதல் போராடி இருந்தோம். எங்களது போராளிகளும் மரணித்திருக்கின்றார்கள். ஆகவே, அன்று முதல் நாம் மக்களின் இலட்சியத்துக்காகவே செயற்படுகின்றோம்." – என்றார்.

# நெடுந்தீவில் கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

22 இந்திய மீனவர்களில் இருவர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் 3 படகுகளுடன் நேற்றுக் காலை நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் – இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட இந்த 22 மீனவர்களில் இருவர் இலங்கையர் எனத் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து படகு வழியாகத் தமிழகத்துக்குத் தப்பிச் சென்று இராமேஸ்வரம் பகுதியில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் சுப்பிரமணியம் தீபன், சுப்பிரமணியம் சுதாகர் ஆகிய சகோதரர்களே இவ்வாறு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1997 ஆம் ஆண்டு போர் உச்சம் பெற்ற சமயம் இங்கிருந்து தப்பிச் சென்று அங்கு அகதிகள் முகாமில் வசிக்கும் இவர்கள் தினக் கூலிக்காக தமிழக மீனவர்கள் படகில் பணியாற்றுகின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.




# இலங்கை மத்திய வங்கிக்கு துணை ஆளுநர்கள் நியமனம்

இலங்கை மத்திய வங்கிக்கு புதிய துணை ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி ஏ.ஏ.எம். தாசிம் மற்றும் ஜே.பி.ஆர். கருணாரத்ன ஆகியோர் துணை ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வாகன விபத்தில் இருவர் காயம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளதுடன் வாகனமும் சேதமடைந்துள்ளது.

கல்முனையைச் சேர்ந்த குடும்பத்தினர் பொலனறுவையில் இருந்து கல்முனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அவர்கள் பயணித்த ஹயஸ் வாகனம் காத்தான்குடி முதலாம் குறிச்சி பிரதான வீதியில் பெரிய பூச்சாடி ஒன்றுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது

இதன்போது ஹயஸ் வாகனத்தின் சாரதியும் அதில் பயணித்த சிறு பிள்ளையும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

ஹயஸ் வாகனத்தின் முன்பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் வீதியில் இருந்த பெரிய பூச்சட்டியும் உடைந்துள்ளது.

காயமடைந்தவர்கள் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கல்வியைப் புதுப்பிப்போம்

மாறும் உலகில் 'மாற்றம்' ஒன்றே மாறாதது. மற்றெல்லாம் மாறிக்கொண்டே இருக்கும்.

கல்வியும் விஞ்ஞான அறிவும் கண்டுபிடிப்புகளும் கூட புது மெருகு பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

அதனால் எல்லாத் துறைகளுக்கும் புதுப்பித்தல் - புத்தாக்கம் - அவசியம். மிக மிக அவசியம். குறிப்பாக கல்வித் துறையில் அது அத்தியாவசியம்.

கணினி வருகையுடன் கல்வியின் ஒவ்வொரு பிரிவுமே தினசரி புத்தாக்கம் பெற்று வருகின்றன. இந்த சவாலுக்கு முகம் கொடுத்துத் தன்னை நிலைநிறுத்த வேண்டியதாக இருக்கின்றது நமது கல்வித்துறை. குறிப்பாக உயர்கல்வித்துறை.

ஆனால் அந்த விடயத்தில் இலங்கையின் அரச உயர் கல்வித் துறையின் பிரதிபலிப்பு - விழிப்புணர்வு - உரிய தரத்தை எட்டவில்லை. அதை நாட்டின் கல்வி அமைச்சரே விசனத்துடன் சுட்டிக்காட்டும் நிலைமையே இங்கு நீடிக்கின்றது.

அரச பல்கலைக்கழகங்களில் புதுப்பிப்புகள் இல்லை. அதனால் வேலை வாய்ப்புச் சந்தையில் தனியார் பல்கலைக்கழகங்களில் படித்த மாணவர்களுக்கு அதிக தேவை - வாய்ப்பு - முன்னுரிமை - இருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருக்கின்றார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச கைத்தொழில் கண்காட்சி - 2024 நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

எனவே, ஒட்டுமொத்த கல்வி முறையிலும் புதுப்பித்தலுக்கான உருமாற்றத்தை ஏற்படுத்துவது அவசியம் என்கிறார் அமைச்சர்.

"நாட்டில் கல்வி என்பது இன்னும் அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. அது மிகப்பெரிய பிரச்சினையாக இன்று மாறியுள்ளது. எனவே, இந்த நிலையை மாற்றி ஒட்டுமொத்த கல்வித் துறையையும் மாற்றங்களுக்கேற்ப அவ்வப்போது புதுப்பிக்கத்தக்கதாக நவீனமயமாக்க வேண்டும்" என்று அவர் கூறுகின்றார்.

ஒரு நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்பாடு மிக அவசியம். அது பள்ளிகளில் இருந்து தொடங்கி பல்கலைக் கழகங்களை நோக்கி நகர வேண்டும். அதே நேரத்தில் பல்கலைக்கழகங்களில் செய்யப்படும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளைத் தயாரிப்புகளாக - உற்பத்திகளாக - மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் கூறியிருக்கின்றார்.

வெளிநாடுகளில் மருத்துவர்கள், துறை சார்ந்த நிபுணர்கள், ஆய்வாளர்கள் தமது பட்டக் கல்வி முடித்த பின்னரும் - பணி செய்யும் காலத்திலும் - உலகில் மாறிவரும் புதுப்புது விடயங்களை அறிந்து, தெரிந்து, கற்றுத் தேர்ந்து, பரிச்சயப்படுத்திக் கொள்வதற்காக வருடத்திற்கு இவ்வளவு விரிவுரைகள், வகுப்புக்கள், செயலமர்வுகளில் பங்குபற்ற வேண்டும் என்றெல்லாம் கட்டாயங்கள் உண்டு.

மாறிவரும் துறைசார் மேம்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்தத் துறைசார் பணியாளர்களே தங்களைப் புதுப்பித்து, மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் எதிர்பார்க்கப்படும் என்றால், அந்த அறிவை - கல்வியை - புகட்டும் உயர் கல்விக்கூடங்கள் மாறி வரும் அறிவு விருத்திக்கேற்ப தங்களை விரைந்து புதுப்பித்து கொள்வது எத்துணை கட்டாயம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தப் புதுப்பித்தலும் மேம்படுத்தலும் என்பது வெறுமனே வைத்தியம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. அறிவை வளர்க்கும் கல்வித் துறையின் ஒவ்வொரு பிரிவுக்கும் இது தவிர்க்க முடியாத கட்டாயம்.

மாறிவரும் உலக அறிவியல் விருத்திப் போக்கிற்கி ஈடு கொடுத்து மேம்படுத்தத் தக்கதாக நமது கல்வித்துறையையும் - குறிப்பாக உயர்கல்வித்துறையையும் - இலங்கையும் புதுப்பித்து மேம்படுத்திக் கொண்டால்தான், இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள் மாறிவரும் உலக மேம்பாட்டுக்கு ஈடு கொடுப்பவர்களாவார்கள். இல்லையேல் பத்தாம் பசலிகளாக அவர்கள் ஒதுக்கப்படுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகிவிடும்.



# ஒரே வாரத்தில் தமிழக மீனவர்கள் 22 பேர் கைது: இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று வேலைநிறுத்தம்

மீன்பிடித் தடைக்காலம் முழந்து ஒரே வாரத்தில் தமிழக மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில், மீனவர்கள் சிறைப்பிடிப்பை கண்டித்தும், இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களை தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுத்து வர வலியுறுத்தி இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போகின் றோம் என இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழகத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதிகளான வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக். ஜலசந்தி கடல் களில் ஏப்ரல் 15 முதல் ஜ/ன் 14 வரை இரண்டு மாத காலங் கள் மீன்களின் இனப்பெருக்க காலமாக கணக்கிட்டு மீன் பிடித் தடைக்காலமாக மத்திய, மாநில அரசுகளால் அறிவிக் கப்பட்டு விசைப்படகுகள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப் படுகிறது.

இந்த மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து கடந்த ஜூன் 15 இலிருந்து தமிழக விசைப்படகு மீனவர்கள் கடலுக்கச் சென்று வருகின்றனர். இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து கடந்த சனிக்கிழமை 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 3000 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று விசைப்படகுகளை எல்லை மீறி இலங்கை கடற் பகுதியில் மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கைப்பற்றி, படகுகளிலிருந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படை யினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் 22 பேரும் படகுகளுடன் காங்கேசன்துறை கடற்படை தளத் திற்கு கொண்ட செல்லப்பட்டனர்.

மீன்பிடி தடைக்காலத்தில் 2 மாதங்களாக தொழிலுக்குச் செல்லாமல், லட்சக்கணக்கான ரூபா செலவில் படகுகளை பழுது நீக்கி தொழிலுக்கு சென்ற அதே வாரத்தில் இலங்கை கடற்படையின் இந்த நடவடிக்கை மீனவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ள னர் .

மேலும் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து 27 தமிழக மீன வர்களின் படகுகளை கைப்பற்றி 204 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர் எனவும் தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மீனவர்கள் சிறைப்பிடிப்பை தொடர்ந்து இராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்தில் மீனவ சங்க பிரதி நிதிகளின் ஆலோசனை கூட்டம் நேற்று பிற்பகல் நடை பெற்றது.

இதன்போது, மீனவர்கள் சிறைப்பிடிப்பை கண்டித்தும், இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களை தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுத்து வர வலியுறுத்தி இன்று திங்கள் கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறோம் என இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித் துள்ளனர்.



# கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய வழக்கில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டனர்

தமிழகத்தையே உலுக்கிவரும் கள்ளக்குறிச்சி கள்ளச் சாரய சம்பவத்தில் தொடர்புடைய 14 பேரை சி.பி.சி.ஐ.டி. பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி ஆகிய பகுதி களில் கள்ளச் சாராயம் என்ற பெயரில் மெத்தனால் கலந்த விஷச் சாராயத்தை விற்பனை செய்ததை வாங்கி அருந்தியவர்களில் இதுவரை 57 பேர் உயிரிழந்துள்ள னர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. ஏ.டி.எஸ்.பி. கோமதி தலைமையிலான தனிக்குழுவினர் கடந்த 5 தினங் களாக விசாரணை மேற்கொண்ட நிலையில், இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 38 பேர் பலி





காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்திய இரண்டு வான்வழித் தாக்குதல்களில் 38 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளி நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அல்ஷாதியிலுள்ள குடியிருப்புப் பகுதியிலும், காசாவில் உள்ள அகதிகள் முகாம்களிலும், அல்துபா பகுதியின் குடியிருப்புப் பகுதிகளிலும் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ள நிலையில் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் அமைப்பின் உட்கட்டுமானம் அமைந்துள்ள இடத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

# தஜிகிஸ்தான் நாட்டில் ஹிஜாப் அணியத் தடை





தஜிகிஸ்தானில் இஸ்லாமிய பெண்கள் பொது வெளியில் ஹிஜாப் அணிந்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையினை மீறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஜிகிஸ்தானில் விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடைக்கு வெளிநாடுகளில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், தஜிகிஸ்தானின் தேசிய உடையான தாஜிக்கை ஊக்குவிக்க தாம் விரும்புவதாக தஜிகிஸ்தானின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# 12 ஆவது குழந்தைக்கு தந்தையானார் எலான்








உலகின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான எலான் மஸ்க் (வயது 52), 12 ஆவது குழந்தைக்கு தந்தையாகியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

டெஸ்லா, ஸ்பேஸ், எக்ஸ் உட்பட பல நிறுவனங்களின் தலைவரான எலான் மஸ்க் நேற்று 12 ஆவது குழந்தையின் தந்தை ஆகியுள்ளார்.

ஆனால், என்ன குழந்தை பிறந்தது அதன் பெயர் தொடர்பான விபரம் எதுவும் வெளியாகவில்லை.

எலான் மஸ்கின் முதல் மனைவிக்கு 5 குழந்தைகள், அதன் பின் இரண்டாவது மனைவி பாடகி ஒருவருடன் அவர் வாழ்ந்த நிலையில், அவருக்கு மூன்று குழந்தைகள், அதன் பின்னர் இன்னொரு மனைவிக்கு மூன்று குழந்தைகள் என 11 குழந்தைகள் இருந்த நிலையில் தற்போது 12 ஆவது குழந்தை பிறந்துள்ளது.

ஐக்யூ அதிகம் உள்ளவர்கள் அதிக குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்று கூறி உள்ள மஸ்க் தற்போது 12 ஆவது குழந்தைக்கு தந்தையாகி உள்ளார்.



# திருமலை வைத்தியசாலை மருத்துவக்கழிவுகளை எரியூட்டும் இயந்திரத்தின் புகைபோக்கிகள் பழுது

## நோயாளருக்கும், அயலவருக்கும் அசௌகரியம் என முறைப்பாடு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வைத்தியசாலையின், மருத்துவக்கழிவுகளை எரியூட்டும் இயந்திரத்தின் புகைபோக்கி, ஒரு வருடத்திற்கு மேலாக உடைந்துள்ள நிலையில் அது திருத்தப்படாமல் அந்தப் பகுதியில் வைத்தியசாலைக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் வெளியேறுகின்ற புகையினால் வைத்தியசாலை உட்பட அதனை அண்டிய பகுதிகளில் வளி மாசடைவதோடு, வைத்தியசாலையில் உள்ள நோயாளிகள், திருகோணமலை கடற்கரையை நோக்கி வருகின்ற உல்லாச பயணிகள் மற்றும் அயலில் வசிக்கும் மக்களுக்கும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படுகின்ற ஆபத்துமிக்க மருத்துவக்கழிவுகள், சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்படுகின்ற உடற்பாகங்கள், பிளாஸ்டிப் பொருள்கள் போன்ற பலவையும் நேர அட்டவணை இன்றி எரிக்கப்படுவதாகத் தெரிய வருகின்றது.



ஆரம்பத்தில் இந்தப் புகையானது சுமார் 60 அடி உயரமான புகைபோக்கியின் மூலம் மேல் வளி மண்டலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது 40 அடி உயரமான புகைபோக்கி உடைந்துள்ள நிலையில் அதனை சீர் செய்யாமல் கழிவுப் பொருள்கள் எரிக்கப்பட்டு வருவதனால் புகை சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக சூழல் பாதிக்கப்பட்டு மக்களுடைய சுவாசத்திலும் கலக்கின்றது. இது தொடர்பாக பலரினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை இது சீர் செய்யப்படவில்லை எனவும் பொதுமக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# பொலிஸாரின் சன்மான நிதி 74 லட்சம் ரூபாவை ஏப்பமிட்ட பொலிஸ் சார்ஜண்ட் பணி இடைநீக்கம்

(கனகராசா சரவணன்)

பொலன்னறுவையில் பொலிஸாருக்கு வழங்கும் சன்மான பணமான 74 லட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர கைது செய்யப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை அவர் பணியில் இருந்து இடை நீக்கம் செய்யுயப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பொலிஸ் சார்ஜண்ட் 2021 ஆம் ஆண்டு பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றி வந்த போது அங்கு பொலிஸாருக்கு சன்மானமாக வழங்கும் பணமான 74 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளநிலையில் இடமாற்றம் பெற்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் இந்த மோசடி தொடர்பாக பொலன்னறுவை விசேட குற்றப் புலன்விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில் இவர் கடந்த 18 ஆம் திகதி கைது செய்ய்யப்பட்டார். பின்னர் அவர் பொலன்னறுவை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் வெளிவந்துள்ளார்.

பிணையில் வெளிவந்தவரை உடனடியாக பணியில் இருந்து பொலிஸ் திணைக்களம் இடைநீக்கம் செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இம்மாதம் முதல் வழங்கப்படும்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இம் மாதம் முதல் வழங்கப்படும் என மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு விசேட சுற்றறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது, 2,500 ரூபாவாக காணப்படும் கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிக்க அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.



# மலையக ரயில் சேவை வழமைக்கு திரும்பியது

மலையக ரயில் சேவை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இகுருஓயா மற்றும் கலபட ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று காலை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தது.

இதனால், மலையகத்திற்கான ரயில் சேவைகளுக்கு சில மணி நேரம் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில்கள் ஹட்டன் ரயில் நிலையத்திலும், கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயில்கள் நாவலப்பிட்டி ரயில் நிலையத்திலும் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், முறிந்து வீழ்ந்த மரம் அகற்றப்பட்டதன் பின்னர் நேற்று பிற்பகல் மலையக ரயில் சேவையை வழமைக்குக் கொண்டுவந்ததாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தல் குறித்து விஜயதாஸ தமிழ்த் தரப்புகளுடன் விரைவில் பேச்சு

## சு.க. அடையாளம் கிடைக்காவிட்டாலும் போட்டியில் நிற்பாராம்



"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற அடையாளம் கிடைக்காது விட்டாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன். அத்துடன், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடன் ஏற்கனவே உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அம்மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் தரப்புக்களுடன் விரைவில் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளோம்."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் தவிசாளராக செயற்படுவதற்கு நீதிமன்றம் தடைகளை விதித்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றி கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியை ஏற்றமைக்கு எதிராக வழக்குத்தொடரப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தினை நீதிமன்றத்தின் ஊடாக நிறைவுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் பெயர்ப்பலகையை மட்டும் சிலர் வைத்திருக்கின்றார்கள். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பேருந்து எனது கையில் தான் உள்ளது. ஆகவே அந்தக் கட்சியின் வழக்கு விவகாரங்கள் எமது பயணத்தினை தடுத்து நிறுத்திவிட முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது நிச்சயமானது. வழக்கு விவகாரங்கள் நிறைவடைந்தால் அக்கட்சியின் ஊடாகப் போட்டியிடுவோம். இல்லையென்றாலும் தேர்தலில் போட்டியிடுவது நிச்சயமானது. அதில் மாற்றுக்கருத்துக்களுக்கு இடமில்லை.

தேர்தல்கள் காலத்தில் உணர்ச்சிகரமான பேச்சுக்களைப் பேசி மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றுக்கொள்ளும் கலாசாரத்தினை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டே எதிர்வரும் ஜனாதிபதி தேர்லில் போட்டியிடுவதற்கு தீர்மானித்தேன். அந்த தீர்மானத்துக்கு அமைவாக போட்டியிடுவதில் உறுதியாக இருக்கின்றேன்.

அதேநேரம், வடக்கு, கிழக்கு மக்களுடன் உரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் விரைவில் அம்மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் உரையாடல்களை மேற்கொள்ளவுள்ளேன். தேசியப் பிரச்சினை தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்களும், தென்னிலங்கை மக்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு காணப்பட வேண்டும்.

தேர்தல் அரசியலை மையப்படுத்தி வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இனவாதத்தினை உயர்த்துவதன் மூலம் நன்மைகளை அடைவதற்கு எதிர்காலத்திலும் இடமளிக்க முடியாது.

அந்த அரசியல் கலாசாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இதே நேரம், ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கான சில முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

அந்த முயற்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அரசமைப்புக்கு அமைவாக உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

ஆகவே தேர்தல் பிற்போடும் முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு ஜனநாயகத்தினை உறுதிப்படுத்தவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்."– என்றார்.

# பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை இன்று முதல் வழமை போல நடக்கும்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

அரச பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் வழமை போன்று இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்று முதல் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு இந்த தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் குமுது கட்டபொலுகே தெரிவித்துள்ளார்.

# இலங்கை தன் கடன்களைத் திருப்பிச் செலுத்த ஆறு ஆண்டுகள் அவகாசம் கிடைக்கும் சாத்தியம்

பாரிஸ் க்ளப் மற்றும் சீனா ஆகிய தரப்புகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை எதிர்வரும் புதன்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வழங்கினார்.

சர்வதேச நாணய நிதியம் அண்மையில் அறிவுறுத்தி இருந்ததற்கு அமைவாக இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது.

இதன்கீழ் இலங்கை தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு 6 ஆண்டுக்கால அவகாசம் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# சவால்களைக் கண்டு தப்பியோட வேண்டாம்!

## மட்டக்களப்பு இளையோருக்கு ஜனாதிபதி அறிவுரை

"எதிர்கால சந்ததியினர் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொண்டு கொள்கைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும், சவால்களை கண்டு ஒருபோதும் தப்பியோட கூடாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் வெற்றிகரமான தலைமைத்தும், தலைசிறந்த அரசியல்வாதி என்ற வகையில் ஜனாதிபதி கொண்டிருக்கும் அனுபவங்களுக்கமைய எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும் அறிவுரை யாதென மட்டக்களப்பு மாவட்ட இளையோருடனான சந்திப்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு 'கோல்டன் ரிவர்' ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளையோர் அணி சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டிருந்ததோடு, அவர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சாதகமான பதில்களை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இந்த சந்திப்பில் கலந்துகொண்ட இளையோருடன் ஜனாதிபதி படங்களிலும் இணைந்துகொண்டார்.

இதன்போது இளையோர் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பதில்கள் வருமாறு:–

**கேள்வி:** நெருக்கடியிலிருந்த நாட்டை மீட்கும் சவாலை எவ்வாறு ஏற்றுக்கொண்டீர்கள், உங்கள் எதிர்கால திட்டம் எவ்வாறானது? நீங்கள் கற்ற கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்க நான் ஆசைப்பட்டடேன். அது கனவாகவே போய்விட்டது. எதிர்கால சந்ததிக்கு அந்த வாய்ப்பு கிடைக்குமா அல்லது அதற்கு நிகராக ஏனைய பாடசாலைகள் மேம்படுத்தப்படுமா?

**பதில்:-** அனைவரும் தப்பியோடும் வேளையிலும் நான் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். சுய நம்பிக்கை இருந்தால் எவரும் சவால்களுக்கு அஞ்ச வேண்டியிருக்காது. ஓடுவதற்காக பயன்படுத்தும் சப்பாத்துக்களை, சவால்களை கண்டு அஞ்சி ஓடுவதற்காக பயன்படுத்தக்கூடாது. நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையில் ஏற்றுக் கொண்டேன். நான் பொறுப் பேற்றிருக்காவிட்டால் நாட்டின் நிலை என்ன வாகியிருக்கும்? இங்கு இவ்வாறு அமர்ந்து பேசக்கூட சந்தர்ப்பம் இருந்திருக்காது. சவால்களை கண்டு அஞ்சக் கூடாது. ஒருபோதும் ஓடி ஒளியவும் கூடாது. றோயல் கல்லூரியைப் போலவே பல பாடசாலைகளின் வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. அரசாங்கத்தினால் சிறந்த கல்வியை வழங்க முடியும். ஆனால் முதுகெலும்பைத் தர முடியாது. அது தம்மிடம் இருக்க வேண்டும்.

**கேள்வி:** நாட்டில் வளங்களிலிருந்தும், பல பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். நமது தொழிற்சாலைகளை மேம்படுத்த உங்களிடம் எவ்வாறான யோசனைகள் உள்ளன?

**பதில் :** உங்களுக்கு பிடித்த பாடகர் யுவன் சங்கர் ராஜா என்று சொன்னீர்கள். அப்படியானால் பாடல்களையும் நாம் இறக்குமதி தானே செய்கிறோம். திறந்த உலகில் எமது சந்தைகளை வலுவூட்ட வேண்டும் என்பதில் எனக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. நமது நாட்டின்

தொடர்ச்சி▼














# சவால்களைக் கண்டு தப்பியோட வேண்டாம்!

தொடர்ச்சி▲

உற்பத்திளை ஏற்றுமதி செய்வது குறித்து இதுவரை கவனம் செலுத்த வில்லை. நாம் ஏற்றுமதியில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்றுமதிசார் பொருளாதாரத்தை உருவாக்க வேண் டும். நெருக்கடி காலத்தில் எம்மிடம் போதிய வெளிநாட்டு கையிருப்பும் இருக்கவில்லை. எரிபொருள் உள்ளிட் டவைகளை இறக்குமதி செய்யவும் வெளிநாட்டு வருவாய் தேவைப்படும். அவ்வாறான தேவைகளுக்காக பெற் றுக்கொண்ட கடனை எம்மால் மீள செலுத்த முடியாமல் போனது.

அதனால், எம்மிடத்திலிருக்கும் வளங்களைப் பயன்படுத்தி அதனூ டாக ஏற்றுமதியை பலப்படுத்துவது குறித்து சிந்திக்க வேண்டும்.

பயிற்றுவிக்கப்பட்ட சிரமப் படையும் எமது வளங்களின் ஓர் அங்கமாகும். அடுத்தது சுற்றுலாத்துறை. மட்டக்களப் பில் மட்டும் நாம் 100 இற்கும் அதிகமான சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணிக் கலாம். அதேபோல் விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் ஊடாகவும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்.

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டாலும், ஏற்றுமதிப் பொருளா தாரத்தை நோக்கி நகராவிட்டால் அடுத்த 15 – 20 வருடங்களுக்குள் இதே பிரச்சி னைக்கு மீண்டும் முகம்கொடுப்போம். அதற்கான சிறந்த வழியாக விவசாயம், சுற்றுலாத் துறைகளை மேம்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதை இலக்காகக் கொள்ள வேண்டும். அதற்காகவே பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**கேள்வி :-** நீங்கள் சிறந்த தலைவர். தலைசிறந்த அரசியல்வாதி. அதன்படி இளையோரின் எதிர்காலம் சிறப்பதற்கு எவ்வாறான அறிவுரையை சொல் வீர்கள்?

**பதில் -** நன்றாக கற்க வேண்டும். அறிவார்ந்த சிந்தனை தேவை. கொள்கைகளுக்கு மதிப்பளியுங்கள். சவால்களைக் கண்டு ஒருபோதும் தப்பியோடாதிருங்கள். – என்று ஜனாதிப தி பதிலளித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசத் துரை சந்திரகாந்தன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.இம்.டபிள்யூ. ஜீ.திசாநாயக்க, மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குகேந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சீனா பயணமானார் அமைச்சர் ஜீவன்

(ஆ.ரமேஸ்)

உலக பொருளாதார மையத்தின் அழைப்பின் பேரில் சீனா நாட்டில் இடம் பெறவுள்ள உலக இளம் தலைவர்க ளுக்கான மாநாட்டில் கலந்துகொள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று மாலை சீன நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பயணித் துள்ளார்.

இவருடன் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் சென்றுள்ளனர் என அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது.



ஒருவாரகால உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச் சர் ஜீவன் தொண்டமான் சீனாவில் முக் கிய நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

இதில் உலக பொருளாதார மையத் தின் அழைப்பின்பேரில் உலக இளம் தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்துக்கொண்டு விசேட உரை யாற்றவுள்ள அவர் சீன விஞ்ஞான ஆய் வகத்தின் (JRDC-Joint Research and Demonstration Center for Water Technology) அழைப்பையேற்று நீர் வளத்துறை, தோட்ட மற்றும் கிராமிய நீர்வளங்களை மேம்படுத்த அடுத்த 5 ஆண்டுக்கான திட்டங்களை வடிவமைத்தல் தொடர்பான நிகழ் வுகளிலும் பங்கேற்க உள்ளார் என அமைச்சின் ஊடகப்பிரிவு மேலும் தெரி வித்துள்ளது.

# சக மாணவனைத் தாக்கிய எட்டு மாணவர்கள் கைது!

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 15 வயது மாணவன் ஒருவ னைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் அதே பாடசாலையைச் சேர்ந்த 8 மாண வர்கள் கைதாகியுள்ளனர்.அந்த மாண வர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க் கம் மோதலாக மாறியுள்ளதாக பொலிஸ ாரின்விசாரணைகளில்தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத்தின் சிலை வவுனியா நகரத்தில் நேற்றுத் திறந்து வைப்பு

**கே.வசந்தன்**

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ அமைப்பின்) தலைவர் சிறீ சபாரத்தினத்தின் சிலை நேற்று வவுனியா நகர மத்தியில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனினால் சிலை திறந்து வைக்கப்பட்டது. நினைவு கல்லை கட்சியின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான



கோவிந்தன் கருணாகரன் மற்றும் கட்சியினுடைய உப தலைவர் ஹென்றி மகேந்திரன் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இதனை அடுத்து சிறீ சபாரத்தினத்தின் சிலைக்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் அஞ்சலியும் செலுத்தினர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் பிரசன்னா, புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள், ஈ.பி.ஆர்ஸ்.எல்.எவ். கட்சியினுடைய முன்னாள் மாகாண சபை உறுப்பினர், தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள், தமிழீழ விடுதலை இயக்கத்தினுடைய ஆரம்பகால போராளிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.























# காத்தான்குடி பெரிய ஜூம்மா பள்ளிவாசல் காஸா சிறுவர் நிதியத்திற்கு நன்கொடை

காஸா பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. 5 வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசலில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பிரார்த்தனையில் கலந்துகொண்டதன் பின்னர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மௌலவி ஹாரித்தினால் தொழுகை நிகழ்த்தப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல், 10,769,417 ரூபாயை நன்கொடையாக வழங்கியது. பிரார்த்தனையின் பின்னர், காஸா நிதியத்திற்கான காசோலை பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விசேட பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி, அங்கு வருகைத் தந்திருந்தவர்களோடு சிநேகபூர்வமாக கலந்துரையாடியமையோடு, செல்பி படங்களிலும் இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க –

“நான் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இந்த பள்ளிவாசல் முஸ்லிம் கலைக்கு சிறந்த உதாரணமாகக் விளங்குகிறது. காத்தான்குடி முஸ்லிம்கள் அரசர் காலத்திலிருந்து அங்கு வாழ்ந்து வந்த ஒரு பிரிவினர். மட்டக்களப்பின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இங்கு வந்தேன். இந்த மாகாணத்தில் விவசாயத்தை நவீனமயமாக்குவதுடன் சுற்றுலாவை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அதேபோல், கல்வியையும் மேம்படுத்த வேண்டும்.


காஸா நிதியத்திற்கு உங்கள் ஆதரவை வழங்குவதற்காக இன்று எனக்கு இங்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. காஸா விவகாரத்தில் அரசாங்கம் வலுவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. அது என்றும் மாறாது. ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் பிரச்சனைகள் இருக்கலாம். அதற்காக, காஸா மக்களை பழிவாங்க வேண்டாம்.

பாலஸ்தீனம் தீர்வை எட்ட உதவ வேண்டும். 5 வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். காலக்கெடு இல்லாமல் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால், 40, 50 வருடங்களாக இது குறித்து பேசப்பட்டது. எனவே, காலக்கெடுவின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இஸ்ரேலின் பாதுகாப்பு பிரச்சினை இருந்தால் அது குறித்துத் தனியாக விவாதிக்கலாம். ஆனால் பாலஸ்தீன அரசு உருவாக்கப்பட வேண்டும். ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அதிருப்தி அடைந்திருக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது.


காஸா போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக காஸா நிதியத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம்

தொடர்ச்சி▼

















# காத்தான்குடி பெரிய ஜு ம்மா பள்ளிவாசல்
# காஸா சிறுவர் நிதியத்திற்கு நன்கொடை

தொடர்ச்சி▲

தீர்மானித்துள்ளது. அதன்படி முதலில் ஒரு மில்லியன் டொலரை வழங்க ஏற்பாடு செய்தோம். நாம் சிறிய நாடாக இருந்தாலும், வங்குரோத்து நிலையை அறிவித்திருக்கும் வேளையிலும் ஒரு மில்லியன் டொலரை வழங்க முன் வந்திருக்கிறோம். இதற்கு பொது மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டுள் ளோம். எனவே இந்த நன்கொடைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், உடல்களை அடக்கம் செய்வது குறித்த பிரச்சினைகளை முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அது குறித்து ஆராய உலக சுகாதார அமைப்பின் திட்டத்தை செயல்படுத் தாமல் தனி குழு நியமிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம் மக்கள் மனம் நொந்துள்ளனர்.

எனவே, உடலை அடக்கம் அல்லது தகனம் செய்தல் அல்லது உடலை விரும்பினால் மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கலாம் என்ற புதிய சட்டத்தை கொண்டு வரத் தீர்மானித்திருக்கிறோம். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளா தாரத்தை மீட்டெடுப்பதற்கு நான் முன்னுரிமை அளித்துள்ளேன். அந்த இலக்கை மிகக் குறுகிய காலத்தில் அடையலாம். அதன்பிறகு, நாட்டின் மற்றைய பிரச்சின்சிகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்படும். அத்துடன், மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் வகையில் உறுமய வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.” – என்றார்.







# இன்றைய ராசி பலன்கள் - 24.06.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயற்றிறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம். சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண் டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதற்றமான நிலைமை உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்குச் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்துக்குப் பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத் திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக் கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர் பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணி களை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப் படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங் களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயற்றிறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்களின் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.06.2024


தனுசு

இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். உங்கள் பணத்தை நீங்கள் சிறப்பாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும்.


மகரம்

இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.


கும்பம்


இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.


மீனம்

உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்குச் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயற்றிறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.





